# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093824

1. District : மாவட்டம் Tirunelveli | PS: காவல்நிலையம் Vigilance and Anti-Corruption | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 08/19 | Date: நாள் 08.05.2019

2. (i) Act சட்டம்: 409, 420 IPC and 7 and 13(2) | Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: r/w.13(1)(c) (d) of PC Act 1988 | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் July 2011 to | Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் February 2012 | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.05.2019 | Time : நேரம் 13.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Ambasamuthiram 40Km West

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் J.RAMAMOORTHY | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் The Project Officer cum Joint Director | (g) Address : முகவரி Tamilnadu Woman Development Corporation, Tirunelveli District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.S.Meenakshi Sundaram, Assistant Project Officer, Tamil Nadu Corporation for Development of Woman Limited Project Implementation Unit, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன், இன்று 08.05.2019 தேதி 13.00 மணிக்கு நான் (C.சால்வன் துரை, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு) பணியிலிருந்த போது சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை உத்தரவு in Crl.O.P.(MD) No.4912 of 2014 and M.P.(MD) No. 1 of 2014, காவல் துறை தலைவர், தமிழ்நாடு, சென்னை-04 அவர்களின் உத்தரவு Rc.No.157319/ Crime.3(2)/2018 dated 05.03.2019 மற்றும் திருநெல்வேலி மாநகர குற்றப்பிரிவு, காவல் நிலைய குற்ற எண். 50/2012 சட்டப்பரிவுகள் 409, 420 IPC மற்றும் Section 7 and 13(2) r/w 13(1) (c) (d) of Prevention of Corruption Act 1988 வழக்கின் பக்கம் 1 முதல் 287 வரை கொண்ட வழக்கு கோப்புடன் இயக்குநரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16 அவர்களின் குறிப்பாணை எண்.41727/2018/SW/SA-10 dt. 01.04.2019 படி திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் மூலம் மாற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய பணிக்கப்பட்ட உத்தரவின்படி திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..R.Authees. Rank ...Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

8/5/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

8-5-2019.

Name: பெயர் C. SALVAN THURAI
Rank: நிலை Inspector of Police No. எண் VAC, Tirunelveli

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

குற்ற எண். 8/2019 சட்டப்பரிவுகள் 409, 420 IPC மற்றும் Section 7 and 13(2) r/w 13(1) (c) (d) of Prevention of Corruption Act 1988 படி வழக்கு பதிவு செய்தேன்.

அனுப்புநர் : ஜெ.இராமமூர்த்தி, திட்ட அலுவலர், இணை இயக்குநர் மகளிர் திட்டம், திருநெல்வேலி. பெறுநர்: காவல் ஆய்வாளர், மாநகர குற்றப் பிரிவு, திருநெல்வேலி மாநகரம். ந.க.எண்.அ1.11554/2012 நாள் 03.03.2012. ஐயா, பொருள்: தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் பணியமைப்பு. புகார் மனு. திரு.எஸ்.மீனாட்சி சுந்தரம், உதவி திட்ட அலுவலர் மகளிர் திட்டம், திருநெல்வேலி மாவட்டம் என்பவர் மீது குற்ற வழக்கு தொடர்வது தொடர்பாக. பார்வை: சென்னை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களின் நேமுக.எண்.459/2012 நாள் 20.03.2012(2) சென்னை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன பொது மேலாளர் அவர்களின் மின் அஞ்சல் நாள் 02.05.2012. நான் திருநெல்வேலி மகளிர் திட்ட அலுவலகத்தில் திட்ட அலுவலராக 03.08.2011 முதல் பணிபுரிந்து வருகிறேன். இவ்வலுவலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கான பயிற்சி, சுழல் நிதி, தொழிற்கடன் வழங்குதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதே அலுவலகத்தில் திரு.எஸ்.மீனாட்சி சுந்தரம், வயது 37 என்பவர் உதவி திட்ட அலுவலர் (வாழ்வாதாரம்) ஆக 05.11.2007 முதல் நாளது தேதி வரை பணிபுரிந்து வருகிறார். அன்னார் மீது அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த மலர்கள் மகளிர் சுய உதவிக்குழு இராஜ கோபாலபேரி, உச்சிமகாளி மகளிர் சுய உதவிக்குழு வாகைக்குளம், உச்சிமகாளி மகளிர் சுய உதவிக்குழு பிரம்ம தேசம், ரோஜா மகளிர் சுய உதவிக்குழு பிரம்ம தேசம் இவர்களிடமிருந்து அனுப்பப்பட்ட கையொப்பமிடாத மனு சென்னை மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, சென்னை மேலாண்மை இயக்குநர் அவர்களால், இராமநாதபுரம் மகளிர் திட்ட அலுவலராக பணியாற்றும் திரு.வே.சுகுமார் என்பவரை இம்மனு மீதான விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டு அன்னார் மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விசாரணையில் கீழ்கண்ட குற்றங்களை திரு.எஸ்.மீனாட்சி சுந்தரம் செய்துள்ளதாக அன்னார் தெரிவித்துள்ளார். மேற்படி குழுக்களை விசார்ணை செய்ததில் ரூ.25,000/- வீதம் பொருளாதார கடன் பெறுவதற்கு வற்புறுத்தியது தெளிவாகிறது. மேலும் புகாரில் குறிப்பிடாத கீழே குறிப்பிட்டுள்ள உண்மையும் திரு.எஸ்.மீனாட்சி சுந்தரம் வாய் மொழியிலிருந்து வெளிப்பட்டிருக்கிறது. "ஒரு செட் நாப்கின்மிஷின் வாங்கிக் கொடுத்தால் நாப்கின் கம்பெனியிலிருந்து தனக்கு ரூ.10,000/- மட்டும் தந்துள்ளார்கள்" உதவி திட்ட

அலுவலர் திரு.எஸ். மீனாட்சி சுந்தரம் சுய உதவிக்குழுக்களை அணுகுகின்ற போது குழுக்களிடம் தான் மட்டுமே குழுக்களுக்கு கடன் பெற்று வழங்க முடியும் என்றும், அதற்கான காசோலை தானே அனுமதி வழங்குவதாகவும் தன்னை ஒரு வல்லமை படைத்த அதிகாரி எனவும், தன்னை மீறி யாரேனும் செயல்பட்டால் லோன் ஏதும் கிடைக்காமல் செய்துவிடுவதாகவும் குழுக்களை மிரட்டியும் சாதுர்யமாக பேசியும் கையூட்டு பெறுவதில் வல்லவர் என்பதில் விசாரணையின்போது தெரியவந்துள்ளது. வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம் இராமசாமிபுரம் ஊராட்சி வெள்ள கவுண்டன்பட்டி இந்திராநகரில் செயல்பட்டு வரும் சூரியகாந்தி மற்றும் தாழம்பூ மகளிர் சுய உதவி குழுக்கள் அளித்த வாக்குமூலத்திலிருந்து அன்னார் திரு.எஸ்.மீனாட்சி சுந்தரம் சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன்பு அவ்விடத்திற்கு வந்ததாகவும், தங்கள் குழுக்களுக்கு பொருளாதாரக்கடன் வாங்க (கறவை மாடு) விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற்றார் எனவும், கையொப்பம் பெறுவதற்கு முன்பாக எங்கள் குழுக்களிடம் ஒவ்வொரு குழுவும் ரூ.50,000/- தனக்கு கண்டிப்பாக தரவேண்டுமெனவும், தரவில்லை என்றால் விண்ணப்பத்தினை வங்கிக்கு பரிந்துரை செய்ய மாட்டேன் எனவும் தன்னை மீறி எங்கும் கடன் வாங்க முடியாது எனவும், உங்களைத் தேடி ஒரு APO உங்கள் வீட்டுக்கு வந்துள்ளேன். இது உங்களுக்கு இளக்காரமாக போய்விட்டதா? என்று பலவாராக பேசினார். நாங்கள் எங்கள் ஏழ்மை நிலையை அவரிடம் எடுத்துக்கூறியதால், சற்று மனம் மாறி அப்படியென்றால் நீங்கள் கண்டிப்பாக ஒவ்வொரு குழுவும் ரூ.30,000/- ஆயிரம் லோன் அனுமதி ஆனவுடன் கண்டிப்பாக தனக்கு தரவேண்டுமென கண்டிப்புடன் கூறினார். மேற்குறிப்பிட்டவாறு மகளிர் சுய உதவிக்குழுக்கள் அளித்துள்ள எழுத்து வாக்குமூலங்களை பரிசீலிக்கும்போது அன்னார் மீதான அனைத்து புகார்களும் உண்மையென நிரூபணமாகிறது. மேலும் Jothi Marine Chemicals என்ற பெயரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, திருநெல்வேலி ஜங்சன் வங்கி கிளை கணக்கு எண் 057002000000406 என்பது இவரது மனைவி பெயரில் இவர் முதலில் செய்த தொழிலின் பெயரில் வங்கிக் கணக்கு வைத்துள்ளதாகவும், இவரது மனைவி பெயர் ஜோதி என்பதும் இவ்வங்கிக் கணக்கு நாளது தேதியில் Jothi Marine Chemicals என்ற பெயரில் நடப்பில் உள்ளது என்பதையும், மேற்படி Jothi Marine Chemicals கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ளது என்பதையும் தான் 09.02.2012 அன்று திருநெல்வேலி ஜங்சன் ஓவர்சீஸ் கிளைக்கு நேரடியாக சென்று அறியப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். Jothi Marine Chemicals, Door No.181/14, Nethaji Road, Kokkirakulam, Tirunelveli.9. அன்னார் மேற்படி முகவரியில் மேற்படி கதவு எண் உடைய வாடகை வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், அவ்வீட்டின் மாடியில் ஒரு சில வருடங்களுக்கு முன்னர் தனது மனைவியின் பெயரில் Jothi Marine Chemicals

தொழில் செய்து வந்த விபரம் தெரிய வந்தது. மேற்படி வங்கி கணக்கு எண்ணில் சுய உதவிக் குழுக்களை வற்புறுத்தி ஒரு குழுவிற்கு ரூ.25,000/- பெருளாதாரக்கடன் பெறுவதற்கு முன் பணத் தொகையாக செலுத்த கட்டாயப்படுத்தியுள்ளதாகவும், அதன்படி மேற்படி மலர்கள் மகளிர் சுய உதவிக்குழு இராஜ கோபாலபேரி, உச்சிமகாளி மகளிர் சுய உதவிக்குழு வாகைக்குளம், உச்சிமகாளி மகளிர் சுய உதவிக்குழு பிரம்ம தேசம், ரோஜா மகளிர் சுய உதவிக்குழு பிரம்ம தேசம் குழுக்கள் நாப்கின் மெஷின் ஆர்டர் செய்வதற்கு முன்னர் முன்பணமாக Jothi Marine Chemicals வங்கி கணக்கு எண். 057002000000406-ல் குழுவுக்கு ரூ.25,000/- வீதம் உதவி திட்ட அலுவலர் திரு.எஸ்.மீனாட்சி சுந்தரம் அவர்கள் தெரிவித்ததன் அடிப்படையில் எங்களால் செலுத்தப்பட்டது எனவும் மேற்படி ரூ.25,000/- தொகையினை மீளப்பெற்று வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். 12.02.2012 அன்று மேற்படி குழுவினரை விசாரித்ததில் சானடரி நாப்கின் மெஷின்கள் Jayasree Industries, Coimbatore என்ற கம்பெனியிலிருந்து கீழே குறிப்பிட்டுள்ள விலைக்கு வாங்கியமைக்கான பட்டியல் தபாலில் வரப்பெற்றுள்ளது எனவும்,

| Invoice No. | Date | Amount Rs. |
|---|---|---|
| 000164 | 07.11.2011 | 160300 |
| 000165 | 07.11.2011 | 10080 |

பெறப்பட்ட Invoice-க்கும் பெறப்பட்டுள்ள மெசின்களுக்கும் வேறுபாடு உள்ளதோ என சந்தேகம் எழுவதாகவும், தங்களுக்கு முழுவதுமாக மின்சாரத்தால் இயங்கக்கூடிய மெசின் தருவதாக உதவி திட்ட அலுவலர் திரு.எஸ்.மீனாட்சி சுந்தரம் கூறினார். ஆனால் பெறப்பட்டுள்ள மெசின் காலால் இயக்கக் கூடியதாகவுள்ளது. எனவே பட்டியலின்படி மெசின்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்யும்படி கேட்டுள்ளார்கள். மேலும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி திருநெல்வேலி ஜங்சன் கிளை வங்கி கணக்கு எண். 057002000000406 வரவு செலவு அறிக்கையினை பெற்று ஆய்வு செய்த போது மேற்படி புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள குழுக்களுக்கு ரூ.25,000/- வீதம் மேற்படி கணக்கில் செலுத்தப்பட்ட தொகை விவரம் credit காலத்தில் இடம் பெற்றுள்ளது. மேலும் ஜீலை 2011 முதல் பிப்ரவரி 2012 முடிய மேற்படி கணக்கில் ரூ.11,36,771/- வரவாக பெறப்பட்டு ரூ.11,32,921/- எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வங்கி கணக்கினை சரிபார்த்த பொழுது செயல்படாத Jothi Marine Chemicals என்ற வங்கி கணக்கில் குழுக்களை கட்டாய படுத்தித்தான் லஞ்சமாக கோரியுள்ள பணத்தை செலுத்த செய்து, இதன் மூலம்

பல லட்ச ரூபாய் லஞ்சமாக உதவித் திட்ட அலுவலர் திரு.எஸ்.மீனாட்சி சுந்தரம் பெற்றுள்ளது சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாகிறது என்ற விபரத்தினை தெரிவித்துள்ளார். எனவே இராமநாதபுரம் மகளிர் திட்ட அலுவலர் விசாரணையில் மேற்படி புகார் மனுவில் கூறப்பட்ட விவரங்கள் நிருபணமாகியுள்ளதாக எனது கவனத்துக்கு தெரிய வருவதால் திருநெல்வேலி மாவட்ட மகளிர் திட்டத்தில் உதவி திட்ட அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.எஸ்.மீனாட்சி சுந்தரம் மிது சட்டப்படி குற்ற வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையினை (FIR) இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கூறிய சந்தர்ப்பங்களின் படி திரு.எஸ்.மீனாட்சி சுந்தரம், உதவி திட்ட அலுவலர் மகளிர் திட்டம், திருநெல்வேலி மாவட்டம் என்பவர் மீது திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2019 சட்டப்பரிவுகள் 409, 420 IPC மற்றும் Section 7 and 13(2) r/w 13(1) (c) (d) of Prevention of Corruption Act 1988 படி பதிவு செய்யப்பட்ட இந்த வழக்கின் மாற்று முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் சிறப்பு நீதிபதி ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் ஆய்வாள் திரு.ஆதீஸ் அவர்களுக்கும் விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

8/5/19

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
Tirunelveli Detachment
TIRUNELVELI